No. of Printed Pages : **11**

**4717**

**A**

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

## PART - III

# இயற்பியல் / PHYSICS

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version )

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 70

Time Allowed : 3.00 Hours ] [Maximum Marks : 70

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

Padasalai.Net

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

## பகுதி - I / PART - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **15x1=15**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **மாற்று** விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[ திருப்புக / Turn over

1. பின்வரும் மின்துகள் நிலையமைப்புகளில் எது சீரான மின்புலத்தை உருவாக்கும் ?

(A) சீரான மின்னூட்டம் பெற்ற முடிவிலா சமதளம்

(B) புள்ளி மின்துகள்

(C) சீரான மின்னூட்டம் பெற்ற கோளகக் கூடு

(D) சீரான மின்னூட்டம் பெற்ற முடிவிலா கம்பி

Which charge configuration produces a uniform electric field ?

(a) Uniformly charged infinite plane

(b) Point charge

(c) Uniformly charged spherical shell

(d) Uniformly charged infinite line

2. மிகவும் நிலைத்த தன்மை கொண்ட செயற்கைப் பொருள் உருவாக்குவதற்கான திட்ட வரையறை எதனைப் பின்பற்றியது ?

(A) கிளி மீன் (B) தாமரை இலை

(C) மயிலிறகு (D) மார்ஃபோ பட்டாம்பூச்சி

Padasalai.Net

The blueprint for making ultra durable synthetic material is mimicked from :

(a) Parrot fish (b) Lotus leaf

(c) Peacock feather (d) Morpho butterfly

3. ஒரு மின்மாற்றியில் முதன்மை மற்றும் துணைச் சுற்றுகளில் முறையே 410 மற்றும் 1230 சுற்றுகள் உள்ளன. முதன்மைச் சுருளில் உள்ள மின்னோட்டம் 6 A எனில், துணைச் சுருளின் மின்னோட்டமானது :

(A) 12 A (B) 2 A (C) 1 A (D) 18 A

In a transformer, the number of turns in the primary and the secondary are 410 and 1230 respectively. If the current in primary is 6 A, then that in the secondary coil is :

(a) 12 A (b) 2 A (c) 1 A (d) 18 A

4. மின்காந்த அலைகளைப் பொறுத்து பின்வருவனவற்றுள் எது தவறானது ?

(A) நெட்டலை

(B) குறுக்கலை

(C) முடுக்கப்பட்ட மின்துகள்களினால் உருவாக்கப்படுகின்றன

(D) இயந்திர அலைகள் அல்ல

Which of the following is false for electromagnetic waves ?

(a) longitudinal

(b) transverse

(c) produced by accelerating charges

(d) non-mechanical waves

Padasalai.Net

5. $^{27}$Al அணுக்கரு ஆரம் 3.6 பெர்மி எனில் $^{64}$Cu அணுக்கரு ஆரம் ஏறக்குறைய, பெர்மியில் :

(A) 4.8 (B) 2.4 (C) 3.6 (D) 1.2

If the nuclear radius of $^{27}$Al is 3.6 fermi, the approximate nuclear radius of $^{64}$Cu in fermi is :

(a) 4.8 (b) 2.4 (c) 3.6 (d) 1.2

6. மின்பாயத்தின் அலகு :

(A) $Nm^{-1}C^2$ (B) $Nm^{-2}C^{-1}$ (C) $Nm^2C^{-1}$ (D) $N^2mC^{-1}$

The unit of electric flux is :

(a) $Nm^{-1}C^2$ (b) $Nm^{-2}C^{-1}$ (c) $Nm^2C^{-1}$ (d) $N^2mC^{-1}$

**7.** ஒரு அலைவுறும் LC சுற்றில் மின்தேக்கியில் உள்ள பெரும மின்னூட்டம் Q ஆகும். ஆற்றலானது மின் மற்றும் காந்தப்புலங்களில் சமமாக சேமிக்கப்படும் போது, மின்னூட்டத்தின் மதிப்பு :

(A) $Q/\sqrt{2}$ (B) $Q/2$ (C) Q (D) $Q/\sqrt{3}$

In an oscillating LC circuit, the maximum charge on the capacitor is Q. The charge on the capacitor when the energy is stored equally between the electric and magnetic fields is :

(a) $Q/\sqrt{2}$ (b) $Q/2$ (c) Q (d) $Q/\sqrt{3}$

**8.** காந்த நீளத்திற்கும் வடிவியல் நீளத்திற்கும் உள்ள தகவு :

(A) 0.833 (B) 0.633 (C) 0.933 (D) 0.733

Padasalai.Net

The ratio of magnetic length and geometrical length is :

(a) 0.833 (b) 0.633 (c) 0.933 (d) 0.733

**9.** செனார் டையோடின் முதன்மைப் பயன்பாடு எது ?

(A) அலை இயற்றி (B) அலை திருத்தி

(C) மின்னழுத்தச் சீரமைப்பான் (D) பெருக்கி

The Zener diode is primarily used as :

(a) Oscillator (b) Rectifier

(c) Voltage regulator (d) Amplifier

**10.** காற்றில் ஒளியின் திசைவேகம் மற்றும் அலைநீளம் முறையே $V_a$ மற்றும் $\lambda_a$. இதே போன்று தண்ணீரில் $V_w$ மற்றும் $\lambda_w$ எனில், தண்ணீரின் ஒளிவிலகல் எண் :

(A) $\frac{\lambda_w}{\lambda_a}$ (B) $\frac{V_w}{V_a}$ (C) $\frac{V_a \lambda_a}{V_w \lambda_w}$ (D) $\frac{V_a}{V_w}$

If the Velocity and Wavelength of light in air is $V_a$ and $\lambda_a$ and that in water is $V_w$ and $\lambda_w$, then the refractive index of water is :

(a) $\frac{\lambda_w}{\lambda_a}$ (b) $\frac{V_w}{V_a}$ (c) $\frac{V_a \lambda_a}{V_w \lambda_w}$ (d) $\frac{V_a}{V_w}$

**11.** நலமான கண்ணின் அண்மைப்புள்ளியின் தொலைவு _________ இருக்கும்.

(A) 30 cm (B) 20 cm (C) 35 cm (D) 25 cm

Padasalai.Net

For a healthy eye, the distance of the near point is _________.

(a) 30 cm (b) 20 cm (c) 35 cm (d) 25 cm

**12.** 2.1 V மின்கலமானது 10 Ω மின்தடை வழியே 0.2 A மின்னோட்டத்தை செலுத்தினால் அதன் அகமின்தடை :

(A) 0.8 Ω (B) 0.2 Ω (C) 1.0 Ω (D) 0.5 Ω

The internal resistance of a 2.1 V cell which gives a current of 0.2 A through a resistance of 10 Ω is :

(a) 0.8 Ω (b) 0.2 Ω (c) 1.0 Ω (d) 0.5 Ω

**13.** செங்குத்தாக செயல்படும் காந்தப்புலத்தில் $\left(\vec{B}\right)$ உள்ள, q மின்னூட்டமும் m நிறையும் கொண்ட துகளொன்று V மின்னழுத்த வேறுபாட்டால் முடுக்கப்படுகிறது. அத்துகளின் மீது செயல்படும் விசையின் மதிப்பு என்ன ?

(A) $\sqrt{\frac{2q^3B^2V}{m}}$ (B) $\sqrt{\frac{2q^3BV}{m}}$ (C) $\sqrt{\frac{2q^3BV}{m^3}}$ (D) $\sqrt{\frac{q^3B^2V}{2m}}$

A particle having mass m and charge q accelerated through a potential difference V. Find the force experienced when it is kept under perpendicular magnetic field $\vec{B}$.

(a) $\sqrt{\frac{2q^3B^2V}{m}}$ (b) $\sqrt{\frac{2q^3BV}{m}}$ (c) $\sqrt{\frac{2q^3BV}{m^3}}$ (d) $\sqrt{\frac{q^3B^2V}{2m}}$

**14.** யங் இரட்டைப் பிளவு ஆய்வில் பிளவுகளுக்கு இடையே உள்ள தொலைவு இரு மடங்காக்கப்படுகிறது. திரையில் தோன்றும் பட்டை அகலம் மாறாமல் இருக்க வேண்டுமெனில், பிளவுகளுக்கும் திரைக்கும் இடையே உள்ள தொலைவு D எவ்வளவு இருக்க வேண்டும் ?

Padasalai.Net

(A) $\sqrt{2}$ D (B) 2 D (C) $\frac{D}{\sqrt{2}}$ (D) $\frac{D}{2}$

In a Young's double slit experiment, the slit separation is doubled. To maintain the same fringe spacing on the screen, the screen-to-slit distance D must be changed to :

(a) $\sqrt{2}$ D (b) 2 D (c) $\frac{D}{\sqrt{2}}$ (d) $\frac{D}{2}$

**15.** வெப்ப ஆற்றலை உட்கவர்வதால் எலக்ட்ரான்கள் உமிழப்படுவது __________ உமிழ்வு எனப்படும்.

(A) வெப்ப அயனி (B) ஒளிமின்

(C) இரண்டாம் நிலை (D) புல

Emission of electrons by the absorption of heat energy is called __________ emission.

(a) Thermionic (b) Photoelectric

(c) Secondary (d) Field

## பகுதி - II / PART - II

குறிப்பு : **எவையேனும் ஆறு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **24** -க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **6x2=12**

**Note :** Answer **any six** questions. Question number **24** is **compulsory**.

**16.** தூண்டப்பட்ட மின்னியக்கு விசையை உருவாக்கும் வழிகளைக் கூறுக.

Mention the ways of producing induced emf.

**17.** ஒளிவிலகல் எண் 1.5 கொண்ட கண்ணாடியின் தள விளைவுக் கோணத்தை காண்க.

Find the Polarizing angle for glass of refractive index 1.5.

**18.** பெல்டியர் விளைவு என்றால் என்ன ?

What is Peltier effect ?

Padasalai.Net

**19.** நிலை மின்னழுத்தம். – வரையறுக்கவும்.

Define “Electrostatic Potential”.

**20.** பயன் தொடக்க அதிர்வெண் என்பதை எவ்வாறு வரையறுப்பாய் ?

How will you define threshold frequency ?

**21.** ஆம்பியர் சுற்று விதியைக் கூறுக.

State Ampere’s Circuital Law.

**22.** வானம் ஏன் நீலநிறமாகக் காட்சியளிக்கிறது ?

Why does sky appear blue ?

**23.** அகச் சிவப்பு கதிர்களின் இரு பயன்பாடுகளைக் கூறுக.

Give two uses of IR radiation.

**24.** காற்றின் மின்காப்பு வலிமை $4 \times 10^{6}$ $Vm^{-1}$. வான்-டி-கிராப் இயற்றியின் கோளகக் கூட்டின் ஆரம் $R = 0.4$ m எனில், வான்-டி-கிராப் இயற்றியால் உருவாக்கப்படும் பெரும மின்னழுத்த வேறுபாட்டைக் கணக்கிடுக.

Dielectric strength of air is $4 \times 10^{6}$ $Vm^{-1}$. Suppose the radius of a hollow sphere in the Van de Graaff generator is $R = 0.4$ m, calculate the maximum potential difference created by this Van de Graaff generator.

## பகுதி - III / PART - III

**குறிப்பு : எவையேனும் ஆறு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **33 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **6x3=18**

**Note :** Answer **any six** questions. Question number **33** is **compulsory**.

Padasalai.Net

**25.** கிர்க்காஃபின் மின்னோட்டம் மற்றும் மின்னழுத்த வேறுபாட்டு விதியைக் கூறுக.

State Kirchhoff's current and voltage rule.

**26.** மாறுநிலைக் கோணம் மற்றும் முழு அக எதிரொளிப்பு என்றால் என்ன ?

What are critical angle and total internal reflection ?

**27.** போட்டான்களின் சிறப்பியல்புகளைப் பட்டியலிடுக.

List out the characteristics of Photons.

**28.** இணைத்தட்டு மின்தேக்கியினுள் சேமித்து வைக்கப்படும் ஆற்றலுக்கான சமன்பாட்டை பெறுக.

Obtain the expression for energy stored in the parallel plate capacitor.

**29.** குறுக்கீட்டு விளைவுக்கும், விளிம்பு விளைவுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?

Mention the differences between interference and diffraction.

**30.** காற்றில் வைக்கப்பட்டுள்ள இரண்டு காந்த முனைகளுக்கு இடையே உள்ள விலக்கு விசை $9 \times 10^{-3}$ N. இரண்டு முனைகளும் சம வலிமை கொண்டவை. மேலும் இரண்டும் 10 cm தொலைவில் பிரித்து வைக்கப்பட்டுள்ளன எனில், ஒவ்வொரு காந்த முனையின் முனைவலிமையைக் காண்க.

The repulsive force between two magnetic poles in air is $9 \times 10^{-3}$ N. If the two poles are equal in strength and are separated by a distance of 10 cm, calculate the pole strength of each pole.

**31.** ஒரு முழு அலை திருத்தியின் மின்சுற்று படத்தை வரைந்து, அவற்றின் உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு அலை வடிவங்களை வரைக.

Padasalai.Net

Draw the circuit diagram of a full wave rectifier and draw its input and output waveforms.

**32.** மின்மாற்றியில் ஏற்படும் பல்வேறு ஆற்றல் இழப்புகளைக் குறிப்பிடுக.

Mention the various energy losses in a transformer.

**33.** $_{92}U^{235}$ அணுக்கருவானது $2\alpha$ துகள்கள், $3\beta$ துகள்கள் மற்றும் $2\gamma$ துகள்களை உமிழ்கிறது. இறுதியான அணு எண் மற்றும் நிறை எண் என்ன ?

$_{92}U^{235}$ nucleus emits $2\alpha$ particles, $3\beta$ particles and $2\gamma$ particles. What is the resulting atomic number and mass number ?

## பகுதி - IV / PART - IV

குறிப்பு : **அனைத்து** கேள்விகளுக்கும் விடையளிக்கவும். **5x5=25**

**Note :** Answer **all** the questions.

**34.** (அ) மின்னோட்டம் பாயும் முடிவிலா நீளம் கொண்ட நேர்க்கடத்தியால் ஒரு புள்ளியில் ஏற்படும் காந்தப் புலத்துக்கான கோவையைப் பெறுக.

**அல்லது**

(ஆ) கதிரியக்க சிதைவு விதியினைத் தருவிக்கவும்.

(a) Deduce the relation for the magnetic field at a point due to an infinitely long straight conductor carrying current.

**OR**

(b) Obtain the law of radioactivity.

**35.** (அ) மின் இருமுனை ஒன்றினால் அதன் அச்சுக்கோட்டில் ஏற்படும் மின்புலத்தைக் கணக்கிடுக.

**அல்லது**

Padasalai.Net

(ஆ) அதிர்வெண் பண்பேற்றம் என்றால் என்ன ? அதிர்வெண் பண்பேற்றத்தின் நன்மை மற்றும் தீமைகளை வரிசைப்படுத்துக.

(a) Calculate the electric field due to a dipole on its axial line.

**OR**

(b) What is Frequency Modulation ? List out the advantages and limitations of frequency modulation.

**36.** (அ) (i) எலக்ட்ரானின் டி-ப்ராய் அலைநீளத்திற்கான சமன்பாட்டினைப் பெறுக.

(ii) 2 eV இயக்க ஆற்றல் கொண்ட எலக்ட்ரானின் உந்தத்தைக் கணக்கிடுக.

**அல்லது**

(ஆ) மேக்ஸ்வெல் சமன்பாடுகளை தொகை நுண்கணித வடிவில் எழுதுக.

(a) (i) Derive an expression for de Broglie wavelength of electrons.

(ii) Calculate the momentum of an electron with kinetic energy 2 eV.

**OR**

(b) Write down Maxwell equations in integral form.

**37.** (அ) வானியல் தொலைநோக்கி பற்றி விவரித்து, அதன் உருப்பெருக்கத்திற்கான கோவையைப் பெறுக.

**அல்லது**

(ஆ) (i) மின்தடையாக்கிகள் தொடர் இணைப்பு தொகுபயன் மின்தடை மதிப்புகளை தருவிக்கவும்.

(ii) 0.5 $mm^2$ குறுக்கு வெட்டுப்பரப்பு கொண்ட தாமிரக்கம்பியில் 0.2 A அளவுள்ள மின்னோட்டம் பாய்கிறது. அத்தாமிரக் கம்பியில் உள்ள கட்டுறா எலக்ட்ரான்களின் அடர்த்தி $8.4 \times 10^{28}$ $m^{-3}$ எனில் இக்கட்டுறா எலக்ட்ரான்களின் இழுப்புத்திசைவேகத்தை கணக்கிடுக.

(a) Explain about Astronomical telescope and obtain the equation for the magnification.

**OR**

(b) (i) Explain the equivalent resistance of a series resistor network.

(ii) A Copper wire of cross-sectional area 0.5 $mm^2$ carries a current of 0.2 A. If the free electron density of copper is $8.4 \times 10^{28}$ $m^{-3}$ then compute the drift velocity of free electrons.

Padasalai.Net

**38.** (அ) லென்ஸ் உருவாக்குபவரின் சமன்பாட்டை வருவிக்கவும்.

**அல்லது**

(ஆ) தொடர் RLC சுற்றில், செலுத்தப்பட்ட மின்னழுத்த வேறுபாடு மற்றும் மின்னோட்டம் இடையே உள்ள கட்டக் கோணத்திற்கான சமன்பாட்டைத் தருவிக்கவும்.

(a) Obtain Lens maker's formula.

**OR**

(b) Derive an expression for phase angle between the applied voltage and current in a series RLC circuit.

**- o O o -**